Australian Government
Department of Social Services

# வலுக்கட்டாய சிறு வயதுத் திருமணம்

## திருமணம் செய்துகொள்ள எவரையும் கட்டாயப்படுத்துவது அவுஸ்திரேலியாவில் ஒரு மோசமான குற்றமாகும்.

திருமணம் செய்துகொள்ளலாமா இல்லையா என்பதைத் தெரிவு செய்யும் சுதந்திரம் அவுஸ்திரேலியாவில் ஒவ்வொருவருக்கும் உண்டு. பொதுவாக, சட்டப்படி திருமணம் செய்துகொள்ள ஒருவர் **18** வயதிற்கும் மேற்பட்டவராக இருக்கவேண்டும். சில சூழ்நிலைகளில் 16 வயதிற்கு மேற்பட்ட ஒருவர் திருமணம் செய்து கொள்ளலாம், ஆனால் இதற்கு நீதிமன்ற உத்தரவு தேவை.

வலுக்கட்டாயப்படுத்தப்படாத மற்றும் ஏமாற்றப்படாத முறையில் திருமணம் செய்து கொள்ள ஒருவர் சம்மதிக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

திருமணம் செய்து கொள்ள இருவரும் சுதந்திரமாகச் சம்மதிக்கும்போது செய்யப்படும் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணமானது வலுக்கட்டாயத் திருமணத்திலிருந்து வேறுபட்டது. ஏற்பாடு செய்யப்பட்டு ஆகும் திருமணங்கள் அவுஸ்திரேலியாவில் சட்டப்படியானவையாகும்.

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாருமோ ஆபத்திலிருந்தால், **000** இல் காவல் துறையினரை அழையுங்கள். அவுஸ்திரேலியக் காவல் துறை பாதுகாப்பானதும் நம்பிக்கைக்குரியதும் ஆகும்.

இலவசமான மற்றும் இரகசியமான அறிவுரையாலோசனைக்கும் தகவல்களுக்கும் **1800 737 732** எனும் இலக்கத்தில் 1800 RESPECT ஐ அழையுங்கள்.

இலவச மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால் **131 450** எனும் இலக்கத்தினை அழையுங்கள்.

## வலுக்கட்டாயத் திருமணத்திற்காக ஒருவரை இன்னொரு நாட்டிற்கு அழைத்துச்செல்வது அல்லது அனுப்புவது அல்லது இதைச் செய்ய இன்னொருவரை ஏற்பாடு செய்வது சட்டத்திற்குப் புறம்பானது.

வலுக்கட்டாய மற்றும் சிறுவயதுத் திருமணமானது சில வேளைகளில் விருப்பத்திற்கெதிராக ஆட்களை இன்னொரு நாட்டிற்கு அல்லது எல்லையைத் தாண்டி நகர்த்துவதுடன் சம்பந்தப்பட்டிருக்கும், மற்றும் இது சட்ட விரோதமானதாகும்.

## நீங்களோ, அல்லது உங்களுக்குத் தெரிந்த யாருமோ ஆபத்தில் இருக்கிறீர்களா?

**131 237** எனும் இலக்கத்தில் 'அவுஸ்திரேலிய மத்திய காவல் துறை' **(Australian Federal Police (AFP))** ஐ அழையுங்கள். துவக்க நிலை அறிவுரையளித்து, வலுக்கட்டாய, சிறுவயதுத் திருமணத்துக்கு அல்லது ஆட்கடத்தலுக்கு பலியானவர்களைத் தங்குமிடவசதி, பண உதவி, ஆலோசனை, சட்ட அறிவுரை அளிப்பவர்களுக்குப் பரிந்துரைத்தல் என்பன AFP ஆல் இயலும்.

மேலதிகத் தகவலுக்கு **www.afp.gov.au** எனும் AFP இனரது வலைத்தளத்திற்கு இட்டுச்செல்லும் தொடர்பு இணைப்பைப் பயன்படுத்துங்கள்.

## உங்களுக்கு உதவக்கூடிய மற்ற சேவைகள் அவுஸ்திரேலியாவில் உள்ளன.

**1800 RESPECT** என்பது 'அவுஸ்திரேலிய தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு, குடும்ப வன்முறை ஆலோசனை சேவை' (Australia's National Sexual Assault, Family and Domestic Violence Counselling service) ஆகும். இலவச, இரகசியமான தொலைபேசி, இணையவழி அறிவுரையாலோசனையையும் தகவல்களையும் இது அளிக்கிறது. அறிவுரையாலோசகர்கள் நீங்கள் சொல்வதை செவிமடுத்துக் கேட்பர், உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பர், நீங்கள் வாழும் பகுதியிலுள்ள மற்ற ஆதரவு சேவைகளுக்கு உங்களைப் பரிந்துரைக்க அவர்களால் இயலக்கூடும்.

**1800 737 732** எனும் இலக்கத்தினை அழையுங்கள் அல்லது 1800 RESPECT இன் **www.1800RESPECT**.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

Australian Government
Department of Social Services

## மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவையா?

**131 450** எனும் இலக்கத்தில் ‘மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை’யை **(Translating and Interpreting Service)** அழையுங்கள். மற்றச் சேவைகளுடன் தொடர்புகொள்ள TIS அமைப்பினால் உங்களுக்கு உதவ இயலும். TIS நிறுவனம் அறிவுரையாலோசனை அளிப்பதில்லை.

## வலுக்கட்டாயத் திருமணம் மற்றும் ஆட்கடத்தல் குறித்த மேலதிகத் தகவலுக்கு:

**www.ag.gov.au** எனும் வலைத்தளத்தில் Attorney General’s Department -இற்கு இட்டுச் செல்லும் இணைப்பினைப் பாவியுங்கள்.